**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 15.04.2025 |
| Case No. | : **O.S. 266/2019** | Nationality | : Indian |
| Name | : சிவராமகிருஷ்ணன் | Religion | : |
| Father's/Husband's Name | : சங்கரன் | Age | : 68 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

வாசாஆ 2 உயில் ஆவணத்தில் முதல் பக்கத்தில் witness என்று பந்துமுனை பேனாவால் எழுதப்பட்டுள்ளதும், 2 வது பக்கத்தில் எழுதப்பட்டுள்ளதும் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி முதல் பக்கத்தில் அனைத்து விவரங்களும் மை பேனாவால் எழுதப்பட்டு மேற்படி witness என்ற ஒற்றை வரி மட்டும் பந்துமுனை பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் அதில் முதல் பக்கத்தில் 3 வகையான பேனாவால் எழுதப்பட்டுள்ளது. ஆணத்தை எழுதியவர்கள் ஒரு பேனாவாலும் கையொப்பம் இட்டவர்கள் வேறு வேறு பேனாக்களாலும் எழுதியுள்ளார்கள். வாசாஆ 2 ன் 2 ம் பக்கத்தில் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நான்தான் எழுதினேன். வாசாஆ 2 உயில் ஆவணம் எழுதி வைக்கப்படவில்லை என்றாலும் அது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. வாசாஆ 4 அறிவிப்பு வருவாய் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் வழக்கறிஞரின் கையொப்பம் போடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் நகலாக உள்ளதால்

ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்பை தயார் செய்த வழக்கறிஞர் கும்பகோணத்தில்தான் உள்ளார். அவரை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். இந்த வழக்கில் வருவாய் துறை அதிகாரிகளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வாசாஆ 5 அறிவிப்பு அரசு அலுவலர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியின் தாயார் பிச்சையம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அந்த பட்டா பொய்யானது. வருவாய் துறை அதிகாரிகள் மேற்படி சொத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் அளித்துள்ளார்கள். நாளது தேதி வரை மேற்படி பட்டா செல்லாது என உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் மேற்படி பட்டா பொய்யானது என்பதால் தனியாக மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

2. 1ம் பிரதிவாதியின் குடும்பத்தாரால் தாவா பி அட்டவணை சொத்தைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பொய்யான பத்திரம் ஆகும். அது தெரிந்துதான் எனது அம்மா நடவடிக்கை எடுத்துள்ளார். அந்த பாகபாத்திய விடுதலை பத்திரம் செல்லாது என உத்தரவிடக்கோரி எந்த நீதிமன்றத்திலும் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருப்பதால் நான் அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. சொத்தின் உரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2025.04.17 10:02:51 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.